**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 11.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்திய இளைஞர்களின் திறமைகள், ஒட்டு மொத்த உலகையும் ஈர்த்து வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- ஜார்கண்டில், வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ள, முதல் கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.
- கோவாவில், வரும் 20-ஆம் தேதி தொடங்கவுள்ள, இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு, பெரும் ஆதரவு கிடைத்திருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.
- புதுச்சேரியில் மீனவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் மழைக்கால நிவாரணம் வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

<u>ே□ாடி-கோவில்</u>

இந்திய இளைஞர்களின் திறமைகள், ஒட்டு மொத்த உலகையும் ஈர்ப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். திறமை வாய்ந்த இந்திய இளைஞர்கள் தத்தம் நாடுகளில் பணி புரிய வேண்டுமென உலகத் தலைவர்கள் பலரும் விரும்புவதாக, அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, குஜராத் மாநிலம் கேடா மாவட்டத்தில் உள்ள வட்தால் சுவாமி நாராயண் கோவிலின் 200-ஆம் ஆண்டு விழாவில், காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டு பேசினார். உலக அளவில்

இந்திய இளைஞர்களுக்கான தேவை அதிகரித்து இருப்பதால், இளைஞர்கள் மூலம் நாட்டை முன்னேற்றவும், இளைஞர்களை நாட்டின் மிகப் பெரிய சொத்தாக மாற்றவும் முக்கியத் துவம் அளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார். இதன் ஒரு பகுதியாகவே, இளைஞர்களின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில், அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், பழைமை-புதுமை இரண்டும் கலந்த புதிய தலைமுறை ஒன்றை உருவாக்க அரசு பாடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அடுத்த 25 ஆண்டுகளுக்குள் இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் நாட்டு மக்கள் அனைவரும் தீவிர பங்களிக்க வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். பாரம்பரியத்தை போற்றாத எந்த ஒரு நாடும் முன்னேற முடியாது என்பதால் நாட்டின் பாரம்பரிய பெருமைகளை இளைஞர்களுக்கு எடுத்துக் கூறுவதில் ஆன்மிகத் தலைவர்களும் முக்கிய பங்களிக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். வட்தால் சுவாமி நாராயண் கோவிலில் 200-ஆம் ஆண்டு விழாவில் நாடெங்கிலும் இருந்து ஆயிரக் கணக்கிலான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

***மோடி-வாழ்த்து***

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இன்று பதவி ஏற்றுள்ள நீதிபதி திரு சஞ்சீவ் கன்னா-விற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நீதிபதி திரு சஞ்சீவ் கன்னாவின் பதவி ஏற்பு விழாவில் தாம் கலந்து கொண்டு அவரது பதவிக் காலம் சிறக்க வாழ்த்தியதாக சமூக ஊடக பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*__மோடி-கிருபளானி__*

ஆச்சார்ய கிருபளானி பிறந்த நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். மாபெரும் விடுதலைப் போராட்ட தலைவரான ஆச்சார்ய கிருபளானி, அறிவு, நேர்மை மற்றும் துணிச்சலின் வடிவமாகவே திகழ்ந்தவர் என்று, சமூகஊடகப் பதிவில் அவர் கூறி உள்ளார். சமூகநீதி மற்றும் ஜனநாயக பண்புகளில் மிகுந்த உறுதிப்பாடு கொண்டிருந்தவர், ஆச்சார்ய கிருபளானி என்றும் பிரதமர் தெரிவித்தார். நாட்டின் முதலாவது கல்வி அமைச்சர் மவுலானா அபுல் கலாம் ஆசாத் பிறந்த நாளை ஒட்டி, அன்னாருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார். விடுதலைப் போராட்ட தலைவர்களில் ஒருவரான மவுலானா அபுல்கலாம் ஆசாத் அறிவின் சுடராகவே போற்றப்படுபவர் என்றும், அவரது தொலைநோக்கு பார்வைகளே, முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்குவதில் அரசின் முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*__ஜார்கண்ட்__*

ஜார்கண்டில், 43 தொகுதிகளில், வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ள, முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. இன்றைய தினம், தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், வாக்காளர்களை கவர்வதற்கான கடைசி நேர முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி எனது வாக்குச் சாவடி- வலுவான வாக்குச் சாவடி என்னும் பிரச்சார இயக்கத்தின் கீழ், இன்று ஜார்கண்ட மாநிலத்தைச் சேர்ந்த பிஜேபி தொண்டர்களுடன் கலந்துரையாடினார். மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்தியிலும்-மாநிலத்திலும் இரட்டை எஞ்சின் அரசு தேவை என்று அவர் கூறினார். ஜார்கண்டில் வனவளம் மற்றும் கனிம வளம் அதிகமாக உள்ள நிலையிலும் பிஜேபி அல்லாத அரசுகள், மாநில மக்களை ஏழைகளாகவே

வைத்து இருந்ததாகவும் லஞ்ச ஊழலே இதற்கு முக்கிய காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார். கடந்த 5 ஆண்டுகளாக காங்கிரஸ், ஜேஎம்எம், ராஷ்டிரீய ஜனதா தளம் ஆகிய கட்சிகள் பெரிய வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இதெல்லாம் பொய் என்பதை மக்கள் உணர்ந்து விட்டதாக திரு நரேந்திர மோடி கூறினார். பிஜேபி, அமைப்பு ரீதியில் வலுவான கட்சி என்றும், அமைப்பு ரீதியில் தொண்டர்களை அடிப்படையாகக் கொண்டே, கட்சி, தேர்தலை சந்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜார்கண்ட் முதலமைச்சரும், மூத்த ஜேஎம்எம் தலைவருமான திரு ஹேமந்த் சோரேன் உசைனாபாத் பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் ஜார்கண்ட் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார். இதற்கிடையே, ஜார்கண்டில் தேர்தல் அலுவலர்களை, தேர்தலுக்கு தேவையான பொருட்களுடன், அவரவர் வாக்குச் சாவடிக்கு அனுப்பி வைக்கும் பணிகள் இன்று தொடங்கி உள்ளன. கடினமான இடங்களுக்கு தேர்தல் பணியாளர்களை அனுப்பி வைக்க இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப் படுவதாகவும் தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<u>ராஜ்நிவாஸ்</u>

பாரத் தர்ஷன் சுற்றுலா திட்டத்தின் கீழ் காஷ்மீர் பகுதியில் இருந்து புதுச்சேரி வந்துள்ள, 25 பேர் அடங்கிய மாணவர் குழு, இன்று ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து கலந்துரையாடியது. புதுச்சேரியின் வரலாறு, பண்பாடு மற்றும் சிறப்புகள் குறித்து, துணை நிலை ஆளுநர் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். மாணவர்கள் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொண்டு, காஷ்மீரின் வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். மாணவர்களின் கேள்விகளுக்கு துணை நிலை ஆளுநர் பதில் அளித்து புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

காஷ்மீர் மாணவர்களுக்கு, புதுச்சேரி ராஜ்நிவாசில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

<u>*திரைப்பட விழா*</u>

55-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் வரும் 20-ஆம் தேதி தொடங்க உள்ளது. இவ்விழாவிற்கான முன்னோட்டமாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் திரைப்படத் துறையினர் மற்றும் ரசிகர்களிடம் இருந்து, திரைப்பட விழாவிற்கு அபார ஆதரவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார். சர்வதேச அளவிலான பெரிய திரைப்பட விழாக்களில் ஒன்றாக, இவ்விழா திகழ்வதாகவும் நாட்டின் பொருளாதாரத்தில் இந்திய திரைத் துறையின் பங்களிப்பு மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை செயலர் திரு சஞ்சய் ஜாஜு இந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் இவ்வாண்டு திரைப்பட விழாவில் இளம் படைப்பாளிகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படும் என்றும், நாட்டின் சிறந்த அறிமுக இயக்குநர் விருது என்ற பெயரில் புதிய விருது வழங்கப்படும் என்றும் கூறினார். Better Man ஆஸ்திரேலிய திரைப்படத்துடன் திரைப்பட விழா தொடங்கும் என்றும் இம்முறை திரைப்பட விழாவில் ஆஸ்திரேலிய திரைப்படங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 55-ஆவது சர்வதேச திரைப்பட விழாவின் போது, வாழ்நாள் சாதனைக்கான சத்தியஜித்ரே விருது, புகழ்பெற்ற ஆஸ்திரேலிய திரைப்பட இயக்குநர் பிலிப் நோய்ஸ்-க்கு வழங்கப்பட உள்ளது. இவ்விழாவில் 81 நாடுகளைச் சேர்ந்த 180-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படும்.

***புதுச்சேரி-மீனவர்***

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், மீனவர் நலத்துறை சார்பில், 19 ஆயிரத்து 302 மீனவ குடும்பங்களுக்கு, அவரவர் வங்கி கணக்கில் தலா 3 ஆயிரம் ரூபாய் மழைக்கால நிவாரணம் வழங்கும் பணிகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். இதெற்கென அரசு 5 கோடியே 79 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மீன்பிடி தடைக்கால நிவாரணம் பெறுவதில் விடுபட்டு போன 379 மீனவ குடும்பங்களுக்கு, தலா 6 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கும் பணிகளையும் முதலமைச்சர் தொடக்கி வைத்தார். இதெற்கென அரசு, 33 லட்சத்து 99 ஆயிரத்து 500 ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. சாலை விபத்தில் உயிர் இழந்த குருசுக் குப்பம் மீனவர் ஒருவரின் குடும்பத்திற்கும், மீனவர்களுக்கான மத்திய அரசின், குழு விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ், 5 லட்சம் ரூபாய் காப்பீட்டு தொகைக்கான காசோலையை முதலமைச்சர் வழங்கினார். மீன்வளத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாண சுந்தரம், திரு செந்தில் குமார், மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளும், விசைப்படகு உரிமையாளர்கள் மற்றும் மீனவர் பஞ்சாயத்து தலைவர்களும் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் மீனவர்களுக்கான மழைக்கால நிவாரணம், தொடர்ந்து 4 ஆண்டுகளாக மழைக்காலத்திலேயே வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது என்று, மீன்வளத் துறை அமைச்சர், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இதனால் மீனவர்களின் வாழ்வாதார இழப்பை ஈடு செய்ய உறுதுணையாக இருக்கும் என்று அவர் கூறி உள்ளார்.

## உலகப் போர்

முதலாம் உலகப் போர் முடிவடைந்ததன் 106-ஆம் ஆண்டு நிறைவு நாளான இன்று புச்சேரியில் மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், சென்னை மற்றும் புதுச்சேரிக்கான பிரஞ்ச் தூதர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள திரு எட்டியன் ரோலண்ட்-பீக் ஆகியோர், கடற்கரை சாலையில் உள்ள பிரஞ்ச் போர் வீரர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்தியாவிற்கும் பிரான்சுக்கும் இடையிலான வரலாற்று தொடர்புகள் மற்றும் நட்புறவை குறிக்கும் வகையில், புதுச்சேரி அரசும் பிரஞ்சு தூதரகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியின் போது, இருநாட்டு தேசிய கொடிகளும் ஏற்றப்பட்டு, இருநாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. முதல் உலகப் போரில் உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் 1 நிமிடம் மவுனம் அனுசரிக்கப்பட்டது.

## கால்பந்து

புதுச்சேரியை பூர்வீகமாகக் கொண்ட பிரஞ்ச் ஃபிரீஸ்டைல் கால்பந்து வீரர் லோகன் இன்று புதுச்சேரியில், கடற்கரை சாலையில் உள்ள பிரஞ்ச் தூதரகம் அருகே, சுற்றுலா பயணிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு கால்பந்து நுணுக்கங்களை கற்றுத் தந்தார். கால்பந்துடன், நடனம் மற்றும் ஏரோபேட்டிக்ஸ் திறன்களை ஒருங்கிணைக்கும் கலை தான், ஃபிரீஸ்டைல் கால்பந்து விளையாட்டு என்றும் இந்த அற்புதக் கலையை, சொந்த மண்ணில் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறினார். ஃபிரீஸ்டைல் கால்பந்து வீரர் லோகன் புதுச்சேரியில், வரும் 14-ஆம் தேதி வரை, அலையன்ஸ் பிரான்சே உள்ளிட்ட இடங்களில் விளையாட்டு நுணுக்கங்களை கற்றுத் தருகிறார். சுற்றுலாத் துறையின் ஒருங்கிணைப்புடன் இதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

***காரைக்கால்***

காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. புகையிலையின் தீமைகள் குறித்து மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, மற்றும் இதர போட்டிகள் நடத்தப்பட்டு, மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் திரு ஆராமுதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

***வானிலை***

அடுத்த 24 மணி நேரத்தில் தென்மேற்கு வங்க கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது, அதற்கு அடுத்த 2 நாட்களில், தமிழக மற்றும் இலங்கை கடலோரப் பகுதிகளை நோக்கி, மேற்கு திசையில் மெதுவாக நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 17-ஆம் தேதி வரை, தமிழகத்திலும் புதுச்சேரி,காரைக்கால் பகுதிகளிலும் மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம், சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், தென்மேற்கு வங்க கடல் மற்றும் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

## தொலைதொடர்பு

நாட்டில் மின்னணுவியல் உற்பத்தி துறையை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், தெற்காசிய நாடுகளின் தொலைதொடர்பு ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான சபையின் 25-ஆவது கூட்டத்தை தொடக்கி வைத்துப் பேசிய அவர், மொபைல் தொலைபேசிகளுக்கான இந்தியாவின் தேவையில் 99.3 சதவிகிதம், உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதாகத் தெரிவித்தார். தொலை தொடர்புத் துறையில் தெற்காசிய நாடுகளின் அனுபவங்கள் மற்றும் கொள்கை ரீதியிலான பிரச்சனைகள் குறித்து, இந்த 3 நாள் கூட்டத்தில் விவாதிக்கப் படுகிறது. டிஜிட்டல் ஏற்றத் தாழ்வுகளை களைவது குறித்தும், அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் மயம் குறித்தும் இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்படுவதாக இந்திய தொலைதொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் தலைவர் திரு ஏ கே லகோட்டி தெரிவித்துள்ளார்.